[29th September 1955

is why an inducement is given by giving them higher pay. But all this will be regularised when we send them for training and appoint properly trained teachers for the schools.

Sri V. MUTHU : ஸார், ஓராசிரியர் பள்ளி முறை ஒரு வருஷ காலமாக நடந்து வருவதாக தெரிகிறது. ஏற்கெனவே நல்ல டிரெயினிங் கொடுத்து அதாவது இரண்டு வருஷங்கள் ட்ரெயினிங் ஆன ஹையர் க்ரேட், செகண்டரி க்ரேட் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வேலை இன்எபிஷியண்டாக இருக்கிறது என்ற புகார்கள் உள்ள ரிப்போர்ட்டை நாம் பார்க்கிறோம். மந்திரி அவர்களுடைய பதிலிலிருந்து இப்பொழுது ஆறு மாத பயிற்சி கொடுக்கப்படுவதாக தெரிகிறது. இந்த ஆறு மாத பயிற்சி பெற்ற ஆசிரியர் பள்ளிகள் எபிஷியண்டாக நடத்தப் படுகிறதா அல்லது இன்எபிஷண்டாக நடத்தப்படுகிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்த ஓராசிரியர்கள் பள்ளிகள் மூலமாக நம்முடைய கல்வி தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்ற அபிப்பிராயத்தில் இவைகள் ஆரம்பிக்கப்பட்டன. பள்ளிக் கூடங்கள் இல்லாத இடங்களில் இவைகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற திட்டம் வகுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டன. எப்படி பள்ளிக்கூடங்கள் நடை பெற வேண்டும் எப்படி ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்க வேண்டும் என்பதைப்பற்றிய விவரங்களைக் கொடுக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டி ருக்கிறது. அந்தக் கமிட்டி அக்டோபர் மாதம் 2-ம் தேதி அதனுடைய அறிக்கையை சமர்ப்பிக்க இருக்கிறது. அதற்குப் பிற்பட்டு அவைகளை ஆலோசித்து நிரந்தரமான ஏற்பாடுகள் செய்யப்படும்.

Sri M. P. SUBRAMANYAM : ஓராசிரியர்கள் தற்காலிகமாக நியமித்திருப்பதாக கூறினார்கள். அவர்களுக்கு இரண்டாண்டு பயிற்சி கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. நியமிக்கப்பட்ட ஆசிரியர் களில் சிலர் 6 வார பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய நிலை என்ன ? இவர்களுக்கு முழு பயிற்சி என்றால் எவ்வளவு காலம் ? எப்பொழுது கொடுக்கப்படும் ? இவர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட் டிருக்கிறார்கள் என்று சொல்வதால் அவர்களுடைய எதிர்கால நிலைமை என்ன என்று தெரிந்துகொள்ளமுடியாமல் இருக்கிறார்கள். இவர் களுக்கு வேலை நிரந்தரப்படுத்தப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது கொடுக்கப் பட்டு வரும் பயிற்சி போதாது. இரண்டு வருஷங்கள் பயிற்சி சாதாரண மாக கொடுக்கப்பட்டு வருகிறது. ஆறு வார பயிற்சி என்பது தாற்காலிக மாக கொடுக்கப்படுகிறது. அப்படி ஆறு வார பயிற்சி கொடுக்கப்பட்டவர் களை நிரந்தரமாக எடுத்துக் கொள்ள முடியாது. அவர்கள் நிரந்தரமாக வரவேண்டும் என்று நினைத்தால் அதற்கு வேண்டிய பயிற்சியை எடுத்து தான் ஆக வேண்டும்.

Sri M. NARAYANAN NAMBIAR : Sir, the district boards are appointing teachers under them in the single-teacher schools. May I know whether the Government have permitted them to post district board teachers in single-teacher schools. If this is done will it not stand in the way of the educated unemployed getting employment ?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, we have specified the qualifications required for appointment as teachers in these schools, and if they satisfy the provisions of these rules, then certainly anybody can be appointed to these posts. The District Board is the competent authority to post the teachers.